# SEC 1 EXAM REVISION WORKSHEETS - LEVEL 2 (PAPER 2)

## உயர்நிலை 1 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் - நிலை 2 (தாள் 2)

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 9 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 10 - 18 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 19 - 27 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 28 - 36 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 37 - 45 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 46 - 54 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 55 - 63 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 64 - 72 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 73 - 81 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 82 - 90 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 91 - 99 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 100 - 108 |
| 13 | அருஞ்சொற்பொருள் (தேர்வுத்தாள் 1 to 12) | 109 - 121 |
| 14 | விடைத்தாள் | 123 - 147 |


WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

## தேர்வுத்தாள் 1

70

### "அ" பிரிவு

**A1 பழமொழிகள், மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.**

Q1 சிங்கப்பூரின் ________________ மீறினால் கடுமையான தண்டனை விதிக்கப்படும்.

Q2 குடும்ப உறுப்பினர்கள் உணவறைக்கு வரும் வரை காத்திருக்காமல் சாப்பிடத் தொடங்கிய முருகனை ________________ என்று அம்மா திட்டினார்.

Q3 அமலா ஒருநாள் முழுவதும் முயற்சி செய்து சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டு ________________ என்பதை நிரூபித்தாள்.

Q4 திருமண வீட்டில் இருந்து நகைகளைத் திருடிக்கொண்டு ஓடிய ஆடவரை உறவினர்கள் ________________ பிடித்தனர்.

Q5 தோல்வியால் துவண்டுபோன நேரத்தில் தாயின் அன்பும் அரவணைப்புமே உந்துசக்தியாக அமைந்து தன் வெற்றிக்கு வழிவகுத்தது என அந்த மருத்துவர் கண்ணீர் மல்கக் கூறியது ________________ என்பதை உணர்த்தியது.

| | | | |
|---|---|---|---|
| 1. | எரிகிற விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும் | 6. | கையும் களவுமாக |
| 2. | சட்டத்திட்டங்களை | 7. | கம்பி நீட்டி |
| 3. | மனம் உண்டானால் வழி உண்டு | 8. | அருமை பெருமைகளை |
| 4. | ஒருவர் பொறை இருவர் நட்பு | 9. | அவசரக்குடுக்கை |
| 5. | அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும் | 10. | ஓட்டைவாய் |

## A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப் பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்தைய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.**

Q6 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வதன் மூலம் சீக்கா நோயிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

சீக்கா நோயிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள ______________________________

______________________________________________________________

Q7 உடலுக்குக் கேடு விளைவிக்கும் விரைவு உணவை மக்கள் விரும்பி உண்ணுகின்றனர்.

மக்கள் விரும்பி உண்ணும் விரைவு உணவு ______________________________

______________________________________________________________

Q8 கணினி விளையாட்டில் அதிக நேரம் செலவிட்டதால் குமார் இறுதி ஆண்டுத் தேர்வில் தோல்வியடைந்தான்.

குமார் கணினி விளையாட்டில் அதிக நேரம் செலவிடாமல் இருந்திருந்தால்

______________________________________________________________

Q9 லீ குவான் யூ அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் சிங்கப்பூர் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

சிங்கப்பூர் பெரும் முன்னேற்றம் அடைந்ததற்கான காரணம் ______________________________

______________________________________________________________

Q10 கடும் உழைப்புடன், தன்னம்பிக்கையும் உடையவனே வாழ்க்கையில் வெற்றிப் பெறுவான்.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு ______________________________

______________________________________________________________



Sec 1 Level 2_Exam Revision worksheets_Text_152pp.indd 6 14/6/21 9:51 AM

# "ஆ" பிரிவு

**B3 அமைப்புச் சொற்கள் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள், பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

நாம் உயிர் வாழ உணவு மிகவும் அவசியமாகும். உணவில் அனைத்து Q11. ______________ மிகுந்ததாக இருந்தால்தான் நாம் நோய்களின் பிடியிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமாக வாழ முடியும். தினந்தோறும் உணவில் கீரைகள், பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆனால், இறைச்சி வகைகளை நம் உணவில் Q12. ______________ சேர்த்துக்கொள்வது நம் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சத்துகளை அறிந்துக் கொண்டு நாம் நல்ல சத்துள்ள உணவு வகைகளை Q13. ______________ உண்ண வேண்டும். உணவே மருந்து என்பதை அறிந்து அதன்படி உண்பதால் நோய் Q14. ______________ நம்மைக் காத்துக்கொள்ள முடியும். அத்துடன், நம்முடைய வேலைகளைப் பிறர் உதவியின்றி, Q15. ______________ உழைக்க கைகொடுக்கும் உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து உண்ணும் பழக்கத்தைச் சிறு வயதிலிருந்து கடைப்பிடிப்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | குறைவாக | 6. | விடுபட்டு |
| 2. | சத்துகளும் | 7. | வராமல் |
| 3. | பகிர்ந்து | 8. | குறையாமல் |
| 4. | நீக்கப்பட்டு | 9. | உறக்கமின்றி |
| 5. | சுறுசுறுப்பாக | 10. | தேர்ந்தெடுத்து |

WORDSMITH

# "இ" பிரிவு

## B4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி 1



கடல் நீரில் உள்ள சிப்பிகள் முத்தை உருவாக்கும் தன்மை உடையவை. சிப்பிக்குள் நுழையும் அந்நிய பொருள் சிப்பியின் உட்புறம் உறுத்துவதால் சிப்பிக்குள் சுரக்கும் திரவமே முத்தாக மாறுகிறது. சிப்பியில் உருவாகும் முத்துக்களில் உருண்டை வடிவமுள்ள முத்துக்களே நல்ல முத்துகளாகும். இம்மாதிரியான உருண்டை முத்துகளை ஆணி முத்துகள் என்று அழைக்கிறார்கள். சில முத்துகள் கருமை, பால் நிறம், இளம் சிவப்பு போன்ற நிறங்களிலும் கிடைக்கின்றன. முத்து இயற்கையாகக் கிடைக்க அதிக காலமெடுக்கும். அதனால், தற்போது செயற்கையான முத்துகளைத் தயாரிக்கிறார்கள். சிப்பிக்குள் தேவையில்லாத பொருள்களைத் தாமாகவே துளையிட்டு நுழைக்கிறார்கள். செயற்கை முத்துகள் பல வடிவங்களில் கிடைக்கின்றன. உலகிலேயே பட்டை தீட்ட வேண்டிய அவசியம் இல்லாத ஓர் இரத்தினம் முத்தே ஆகும். எல்லா இரத்தினங்களும் பட்டைத் தீட்டப்படும் பொழுதுதான் நல்ல பொலிவினைப் பெறும். ஆனால், இயற்கையிலேயே நல்ல பொலிவுடன் கிடைப்பது முத்து ஒன்றுதான்.

Q16 சிப்பியில் உருவாகும் முத்துக்களில் சிறப்பான முத்துகளாகக் கூறப்படுபவை எவை?

1. நீள வட்ட வடிவ முத்துகள்
2. தட்டை வடிவ முத்துகள்
3. உருண்டை வடிவமான முத்துகள்
4. அரை வட்ட வடிவமான முத்துகள் ( )



Sec 1 Level 2_Exam Revision worksheets_Text_152pp.indd 8 14/6/21 9:51 AM

Q17 செயற்கை முத்துகள் ஏன் உற்பத்தி செய்யப்படுகின்றன?

1. அவற்றை மிகவும் சீக்கிரம் செய்துவிடலாம் என்பதால்
2. அவற்றைச் செய்வது சுலபம் என்பதால்
3. சிப்பிக்குள் தேவையில்லாத பொருள்களை நுழைக்கலாம் என்பதால்
4. இயற்கை முத்துகள் கிடைப்பதற்கு நாளாகும் என்பதால் ( )

Q18 நவரத்தினங்களில் சிறப்பானது முத்து என்று ஏன் கூறப்படுகிறது?

1. பட்டைத் தீட்ட வேண்டிய தேவை இல்லாததால்
2. இயற்கையிலேயே நல்ல பொலிவுடன் கிடைப்பதால்
3. பல வடிவம், பல நிறங்களில் கிடைப்பதால்
4. கடலில் மட்டும் கிடைப்பதால் ( )

**பகுதி 2**




சிறிய நாடாக இருந்தாலும் சீரிய வளர்ச்சியால் பெரிதாகப் பேசப்படும் நாடு நம் சிங்கப்பூர் ஆகும். சிறிய நாடான சிங்கப்பூரில் பறவைகளுக்காக இயற்கைச் சூழலில் பெரிய அளவு பரப்பில் ஜூரோங் பறவை பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் ஒரு பெரிய வலை கூண்டுக்குள் பல பறவைகளைச் சுதந்திரமாக வைத்துப் பராமரிக்கின்றனர். இதனால், பறவைகள் கூண்டுக்குள் இருந்தாலும், இயற்கையைச் சுதந்திரமாக அனுபவித்து வாழ முடியும். இந்தப் பறவை பூங்காவில் எந்தெந்த இடத்தில் என்னென்ன வகை பறவைகள் உள்ளன என்பதற்கான தெளிவான வரைபடம் நுழைவுச்சீட்டு வாங்குமிடத்தில் கொடுக்கப்படுவதால் எளிதாக நாம் பறவைகளை இங்கே காண முடியும். இந்தப் பூங்காவின் மற்றொரு சிறப்பு ஜூரோங் அருவியாகும். உலகில் தொடர்ச்சியாக விழும் செயற்கை அருவிகளுள் மிக உயரமானது இந்த அருவி ஆகும். 98 அடி உயரமான இந்த அருவியில் 140 லிட்டர் நீரானது பாய்கிறது. இவ்வாறு பாயும் நீரானது மறுசுழற்சி செய்யப்படுகிறது. நம்முடைய ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிப்பதற்கான ஒரு சிறந்த இடம் ஜூரோங் பறவை பூங்கா என்று கூறினால் அது மிகையாகாது.



Sec 1 Level 2_Exam Revision worksheets_Text_152pp.indd 9 14/6/21 9:51 AM

**தேர்வுத்தாள் 1**

Q19 ஜூரோங் பறவை பூங்காவில் பறவைகள் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றன?

1. சுதந்திரமாக வெளியில் விடப்பட்டு
2. கூண்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டு
3. அனைத்துப் பறவைகளையும் ஒரே இடத்தில் வைக்கப்பட்டு
4. பெரிய வலை கூண்டுக்குள் சுதந்திரமாக விடப்பட்டு ( )

Q20 ஜூரோங் பறவை பூங்காவில் விழும் அருவியின் சிறப்பு அம்சம் என்ன?

1. 98 அடி உயரமானது
2. அருவியில் 140 லிட்டர் நீர் பாய்வது
3. உலகிலுள்ள செயற்கை அருவிகளில் மிக உயரமானது
4. இவ்வருவியின் நீரானது மறுசுழற்சி செய்யப்படுவது ( )

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (25 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.**

**பகுதி 1**

உலகிலேயே ஓர் உன்னதமான உறவு நட்பு ஆகும். நட்பு, தோழமை, சினேகம் என்பது இருவருக்கிடையே அல்லது பலருக்கிடையே ஏற்படும் உறவாகும். நாடு, வயது, மொழி, இனம் கடந்து நட்பு உருவாகிறது. ஒருவர் நேரடி நட்பு, பேனா நட்பு, மின்னஞ்சல் நட்பு எனப் பல **வழிகளில்** நட்பு கொள்ளலாம். அவரவருக்கு எவ்வழிகள் ஏற்றதோ அவ்வழிகளைப் பின்பற்றி நட்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இதுநாள் வரை எனக்கு எந்த நண்பர்களும் இல்லை என யாருமே கூற முடியாது. நட்பு என்பது சிரித்து மகிழ்வதற்காக மட்டுமல்ல, துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் நட்பு அவசியமாகும். **துன்பம்** வரும்போது உடனடியாக வந்து உதவி செய்வது நட்பிற்கான பெரும் அடையாளம் ஆகும்.

நட்பின் பெருமையை உணர்த்துவதற்காக உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நண்பர்கள் தினமாகக் (Friendship day)



Sec 1 Level 2_Exam Revision worksheets_Text_152pp.indd 10 14/6/21 9:51 AM

கொண்டாடப்படுகிறது. உலகில் உண்மையான நட்புக்கு ஈடு இணை கிடையாது என்று நட்பின் பெருமையைப் பெரியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சாதி, மதம், இனம், மொழி, பால் கடந்து அன்பின் **அடையாளமாக** நண்பர்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

நண்பர்கள் தினத்தில் நேரில் சந்திக்க **வாய்ப்பு** கிடைக்கும் நண்பர்கள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி தங்களது அன்பைப் பரிமாறிக்கொள்கின்றனர். மற்றும், தொலைதூரத்தில் இருப்பவர்களுக்குக் கைத்தொலைபேசி வழியாகக் குறுந்தகவல் அனுப்பியும், கணினி வழியாக மின்னஞ்சல் அனுப்பியும் தங்கள் நட்பைப் பலப்படுத்திக் கொள்கின்றனர்.

நல்ல நட்பு போலவே தீய நட்பும் ஒருவருடைய வாழ்க்கையில் மாற்றத்தை **விளைவிக்கிறது**. உதாரணமாக, தீய நட்பானது புகைத்தல், போதைப் பொருளுக்கு அடிமையாதல், கொலை, கொள்ளை போன்ற குற்றங்களில் ஒருவரை ஈடுபட வைக்கிறது. அதன் காரணமாக நல்லவர்களும் தீயவர்களாக மாறும் அபாயம் உண்டாகுகிறது. ஆகவே, மாணவப் பருவத்திலேயே நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாக வாழ்வில் சிறப்படையலாம் என்பதை மாணவர்கள் உணர்ந்து நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

WORDSMITH
EQ SKILLS = JUMP grades + achieve Big

**வினாக்கள்:**

Q21 நாம் நட்பை பெறுவதற்கு எவ்வகையான வழிமுறைகளைப் பின்பற்றலாம்?
(5 மதிப்பெண்கள்)

______________________________

______________________________

______________________________

______________________________

Q22 ஒருவருக்கு நல்ல நட்பு இல்லாமல் போகும்போது என்ன நேரிடும்?
(4 மதிப்பெண்கள்)

Q23 நண்பர்கள் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது? அது கொண்டாடப்படுவதற்கான காரணம் என்ன? (6 மதிப்பெண்கள்)

Q24 நண்பர்கள் தினத்தன்று நட்பு எவ்வாறு பலப்படுத்தப்படுகிறது?
(5 மதிப்பெண்கள்)



Sec 1 Level 2_Exam Revision worksheets_Text_152pp.indd 12 14/6/21 9:51 AM

Q25 தீய நட்பினால் உண்டாகும் விளைவுகள் யாவை? (5 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**சொற்பொருள்** (5 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை எழுதுக.**

Q26 வழிகளில் ____________________

Q27 துன்பம் ____________________

Q28 அடையாளமாக ____________________

Q29 வாய்ப்பு ____________________

Q30 விளைவிக்கிறது ____________________

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG



Sec 1 Level 2_Exam Revision worksheets_Text_152pp.indd 13 14/6/21 9:51 AM

# அருஞ்சொற்பொருள்

## தேர்வுத்தாள் 1

| | | | |
|---|---|---|---|
| 1. | தொலைநோக்கு | - | முன்கூட்டியே நடக்கப்போவதைக் கணிப்பது (Futuristic) |
| 2. | விடுபட்டு | - | நீங்கி (Left) |
| 3. | கைகொடுக்கும் | - | உதவும் (Help) |
| 4. | அந்நிய | - | புதிய (New) |
| 5. | உறுத்துவதால் | - | வருத்துவதால் (Harsh) |
| 6. | சுரக்கும் | - | ஊறும் (Secretion) |
| 7. | திரவ | - | Chemical |
| 8. | செயற்கையான | - | மனிதனால் செய்யப்பட்டது (Artificially) |
| 9. | துளையிட்டு நுழைக்கிறார்கள் | - | ஓட்டையிட்டு உள்ளே புகுத்துகிறார்கள் (Drilled) |
| 10. | பொலிவினை | - | அழகினை (Brightness) |
| 11. | சீரிய | - | படிப்படியான சிறந்த (The best) |
| 12. | பராமரிக்கின்றனர் | - | பாதுகாக்கின்றனர் (Maintaining) |
| 13. | அருவி | - | நீரூற்று (Fountain) |
| 14. | மறுசுழற்சி | - | மறுபடியும் பயன்படுத்துவது (Recycle) |
| 15. | உன்னதமான | - | மிகச் சிறப்பான (Best) |
| 16. | ஏற்றதோ | - | நல்லதோ (It may fit) |
| 17. | குறுந்தகவல் | - | சுருக்கமான செய்தி (SMS) |
| 18. | அபாயம் | - | ஆபத்து (Danger) |



Sec 1 Level 2_Exam Revision worksheets_Text_152pp.indd 114 14/6/21 9:52 AM

**சிகரம் - உயர்நிலை 1 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் - நிலை 2 (தாள் 2)**

# விடைத்தாள்

## தேர்வுத்தாள் 1

### A1 பழமொழிகள், மரபுத்தொடர்கள், இணைமொழிகள்

Q1 சட்டத்திட்டங்களை (2)

Q2 அவசரக்குடுக்கை (9)

Q3 மனம் உண்டானால் வழி உண்டு (3)

Q4 கையும் களவுமாக (6)

Q5 அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும் (5)

### A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல்

Q6 நாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

Q7 அவர்கள் உடலுக்குக் கேடு விளைவிக்கிறது.

Q8 இறுதி ஆண்டுத் தேர்வில் வெற்றியடைந்திருப்பான்.

Q9 லீ குவான் யூ அவர்களின் தொலைநோக்குப் பார்வை ஆகும்.

Q10 கடும் உழைப்பும், தன்னம்பிக்கையும் தேவை.

### B3 அமைப்புச் சொற்கள்

Q11 சத்துகளும் (2)

Q12 குறைவாக (1)

Q13 தேர்ந்தெடுத்து (10)

Q14 வராமல் (7)

Q15 சுறுசுறுப்பாக (5)

### B4 தெரிவுவிடைக் கருத்தறிதல்

Q16. 3 Q17. 4 Q18. 2 Q19. 4 Q20. 3



Sec 1 Level 2_Exam Revision worksheets_Text_152pp.indd 128 14/6/21 9:52 AM

## C5 சுயவிடைக் கருத்தறிதல்

Q21 நாம் ஒருவருடன் நேரடியாக நட்பு கொள்ளலாம். கடிதம் மூலம் அதாவது பேனா நட்பு கொள்ளலாம் மற்றும் மின்னஞ்சல் அனுப்புவதன் வாயிலாகவும் நட்பு கொள்ளலாம். இவையே, நட்பைப் பெறுவதற்கான வழிமுறைகள் ஆகும்.

Q22 ஒருவருக்கு நல்ல நட்பு இல்லாமல் போகும் போது அவருக்குத் துன்பம் நேர்ந்தால் உதவி செய்ய யாரும் இருக்கமாட்டார்கள்.

Q23 நண்பர்கள் தினம் ஆகஸ்டு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது. நட்பின் பெருமையை உணர்த்துவதற்காகக் கொண்டாடப்படுகிறது. மற்றும் சாதி, மதம், இனம், மொழி, பால் கடந்து அன்பின் அடையாளமாகவும் நண்பர்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

Q24 நண்பர்கள் தினத்தில் நேரில் சந்திக்க வாய்ப்பு கிடைக்கும் நண்பர்கள் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி தங்களது வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். மேலும் தொலைதூரத்தில் வசிப்பவர்கள் கைத்தொலைபேசி வழியாகக் குறுஞ்செய்தி அனுப்பியும், கணினி வழியாக மின்னஞ்சல் அனுப்பியும் வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். இவ்வகையில் நண்பர்கள் தினத்தன்று நட்பு பலப்படுத்தப்படுகின்றது.

Q25 தீய நட்பின் காரணமாக நல்லவர் ஒருவர் தீயவராக மாறுகிறார். அதன் காரணமாகப் புகை பிடித்தல், போதை பொருளுக்கு அடிமையாகிறார். மேலும், கொலை, கொள்ளை போன்ற நாச வேலைகளிலும் ஈடுபட்டு சமூக தீமைகளுக்கு வழி வகுக்கிறார். இவையே தீய நட்பினால் உண்டாகும் விளைவுகள் ஆகும்.

## சொற்பொருள்

Q26 முறைகளில்

Q27 கேடு

Q28 சின்னமாக

Q29 சந்தர்ப்பம்

Q30 உண்டாக்குகிறது



Sec 1 Level 2_Exam Revision worksheets_Text_152pp.indd 129 14/6/21 9:52 AM